ளர் சண்முகம் முன்னிலை வகித்தார். மேலாளர் ஜெயந்தி உட்பட நிர்வாகிகள், சங்க அங்கத்தினர்கள் பங்கேற்றனர்.

தொடர்ச்சியாக, நாளை, ரத்ததான முகாம், 20ம் தேதி, தொழில்நுட்ப மேம்பாடு கருத்தரங்கு ஆகியன நடக்கிறது.

தினமலர் 15/11/2018

## பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு மாசுக்கட்டுப்பாடு வாரியம் தீவிரம்

**திருப்பூர், நவ. 15–**

மாசுக்கட்டுப்பாடு வாரியம் சார்பில், பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு முகாம், நாளை நடக்கிறது.

ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும், பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக்கூடாது என, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. வரும் ஜன., 1ம் தேதி முதல், பிளாஸ்டிக் தடை அமலுக்கு வருகிறது. இதன் வெள்ளோட்டமாக, பெரும்பாலான மாவட்டங்களில், தற்போது முதலே, படிப்படியாக பிளாஸ்டிக் பயன்பாடு குறைக்கப்பட்டு வருகிறது.

இயற்கையை பாழ்படுத்தும் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பயன்பாட்டை முழுமையாக ஒழிப்பதற்காக, மாசுக்கட்டுப்பாடு வாரியம் களமிறங்கியுள்ளது. இதற்காக, மாவட்டம் தோறும், விழிப்புணர்வு முகாம் நடத்தப்படுகிறது.

திருப்பூர் மாவட்ட மாசுக்கட்டுப்பாடு வாரியம் சார்பில், பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு முகாம், தாராபுரம் ரோட்டில் உள்ள வித்யா கார்த்திக் மண்டபத்தில், நாளை நடைபெறுகிறது. காலை 10:00 மணிக்கு துவங்கும் இந்த முகாமில், அனைத்து திருமண மண்டப உரிமையாளர்கள், ஓட்டல், உணவக உரிமையாளர்கள் பங்கேற்க, மாசுக்கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக, வரும் 27ல், திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முதல் டவுன்ஹால் வரை, பேரணி நடத்தி, மக்கள் மத்தியில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என, மாசுக் கட்டுப்பாடு வாரிய மாவட்ட பொறியாளர் செந்தில் விநாயகம் தெரிவித்தார்.

திருப்பூர் தொழில் துறையினர், பின்னலாடை துறை வளர்ச்சிக்கு தேவையான கட்டமைப்புகளை கண்டறிந்து, உருவாக்கி வருகின்றனர். தென்னிந்திய இறக்குமதி இயந்திர பின்னலாடை துணி உற்பத்தியாளர் சங்கம் (சிம்கா), நிட்டிங் துறைக்கு, 15.35 கோடி ரூபாய் மதிப்பில், பொது பயன்பாட்டு மையம் அமைக்க திட்டம் உருவாக்கியது.

இதற்கு ஒப்புதல் அளித்த மாநில அரசு, மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பியது. கடந்த 12ம் தேதி, சிறு, குறு தொழில் துறை அமைச்சகம் சார்பில், டில்

சிவானந்தன் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில், திருப்பூ ரில் நிட்டிங் பொது பய பாட்டு சேவை மைய அமைக்க இறுதி ஒப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சிம்கா சங்க தலை விவேகானந்தன் கூ தாவது:

திருப்பூர் பின்னலா நிறுவனங்கள், 25 ஆ கோடி ரூபாய் மதி ஏற்றுமதி ஆடை வர்த் 10 ஆயிரம் கோடி ரூ மதிப்பில் உள்நாட்டு தகம் என, மொத்த ஆயிரம் கோடி ரூபா வர்த்தகம் மேற் கின்றன. உள்நாடு ம

## 'இப்போது புதிதாக மா

### கால்நடை

**அவிநாசி, நவ.15–**

'கோமாரி நோய் அச்சுறுத்தல் இருப்பதால், இப்போதைக்கு புதிய மாடு வாங்குவதை தவிர்ப்பது நல்லது' என, கால்நடை மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

அவிநாசி சுற்றுப்புற கிராமங்களில், ஏராளமான விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். சமீபநாட்களாக, பரவி வரும் கோமாரி நோய் பீதி, கால்நடை வளர்ப்போர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், அவிநாசி மற்றும் சுற்றுப்புற பகுதி களில், கோமாரி தாக்குதல் இல்லை கால்நடை பராம துறையினர் கூறுகி

இது குறித்து, கா மருத்துவமனை பரிமள ராஜ்குமா தாவது:

ஈரோடு, புளிய சந்தையில், கா ளுக்கு கோமாரி பரவியுள்ளது. சுற்றுப்புற பகு கோமாரி நோய் இல்லை. ஆறு ம ஒரு முறை என, இரு முறை மா

# கந்த சஷ்டி விழா திருக்கல்யாண

## மயில்வாகனத்தில் அருளிய முருகப்பெருமான்

**திருப்பூர், நவ. 15–**

கந்த சஷ்டி விழாவின் நிறைவு நாளான நேற்று, வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமானுக்கு, திருக்கல்யாண உற்சவம் நடந்தது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள, முருகன் கோவில்களில், கந்தசஷ்டி விழா கோவிலில் உள்ள சண்முக சுப்பிரமணியர், திருமுருகன் பூண்டி சண்முக நாதர், மலைக்கோவில் குழந்தை வேலாயுதசாமி கோவில், கொங்கணகிரி கந்தபெருமாள் கோவில்களில், சூரசம்ஹார விழா, கோலாகலமாக நடந்தது.

சஷ்டி விரதத்தின் அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து, சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளிய உற்சவமூர்த்திகளுக்கு, திருக்கல்யாண உற்சவம் நடந்தது.

தொடர்ச்சியாக, மயில் வாகனம் ஏறி, பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். திருப்பூர் வாலிபாளையம்

